1981 ஆகஸ்ட் 24]

கோவை நகரத்திலுள்ள வக்ஃபு பாதுகாப்புப் பேரவையிடமிருந்து பெறப்பெற்ற மகஜர்.

*வினா எண் 35—திரு. கு. ரமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் உள்ள வக்ஃபு பாதுகாப்புப் பேரவை என்ற ஸ்தாபனத்தின் சார்பில் அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் தேதியிட்ட மகஜர் ஒன்று வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அம் மகஜரில் கூறப்பட்டுள்ள வக்ஃபு சொத்துக்களைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் வக்ஃபு சொத்துக்கள்தானா அல்லது இல்லையா என்பது பற்றிய வழக்கு ஒன்று நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

கோமுகி அணையினை விரிவுபடுத்தும் திட்டம்

*வினா எண் 36—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள கோமுகி அணையில் நீர்வரத்து அதிகம் இருப்பதால், எதிர்கால நன்மை கருதி அணையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) கோமுகி நீர்த் தேக்கத்தின் மேல் மட்டத்தை உயர்த்தி, கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி பகுதியில் அதிக நீர் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே, அதற்குக் கீழேயுள்ள விருத்தாச்சலம்,

ஓமாத்தூர் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அதிகமாக நீர் வரும்போது, கீழேயுள்ள அணைகள் பகுதிகளில் ஏற்கனவே உள்ளவர்கள் பாதிக்கப்படாமல் அந்த நீரை விடுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்படி அணைகளுடைய கொள் அளவை அதிகப்படுத்தும் போது சில பிரச்னைகள் வந்து விடுகின்றன. ஏற்கனவே, இருக்கக்கூடிய மண்களை அப்புறப்படுத்தி, டீ-சில்ட் செய்து கொள்ளளவை அதிகப்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி, எந்தவிதமான பாதிப்பும் வராது என்பது உண்மை. ஆனால், பொருளாதாரத்தை கணக்கில்கொண்டு, அந்த அணையினுடைய கொள்ளளவை விரிவுபடுத்தும் திட்டமாக இல்லாமல், அதை உயர்த்துவது என்று முடிவெடுத்திருக்கிறோம். அதனால், கீழ்ப்புறத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்குப் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு அவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறது.

சோழபுரம் பிர்க்காவில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்கள்

*வினா எண். 37— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தாலுகா, சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாக எடுத்து சில தனியார் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசபாளையம் வட்டம், சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் யாரும் திருட்டுத் தனமாக எடுக்கவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS